மனப்போக்கு மாருதவரிடம் மண்டியிடலாமா?

Phone No 4502
விலை அரை அணு

Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (17—4—50) ✠ வெளியூர் (18—4—50) [இதழ் 227

குறுக்கே நிற்போரை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துக!

வம்பு செய்வோரை வருந்தி அழைப்பதேன்?

—(0)—

துணிவைத் துணைகொண்டு புத்துலகு காணவேண்டும்

"ராஜிநாமாவைத் திருப்பிப் பெறவேண்டும் என்று, பல இடங்களிலிருந்து கடந்த சில நாட்களாக எனக்குக்கிடைத்து வரும் வேண்டுகோளை ஆவலோடு ஆராய்ந்து பார்த்தேன். அப்படிப் பார்த்ததன் பயனாக, நான் எனது மனதைமாற்றிக் கொள்ளவேண்டிய அவசியம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை."

இது, இந்திய அரசாங்கத்தின் கைத்தொழில் அமைச்சராக இருந்து அண்மையில் ராஜிநாமா செய்த தோழர் சியாம பிரசாத்முகர்ஜி, இந்திய பிரதமர் பண்டித நேருவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள முக்கிய செய்தி.

இத்துடன், தன்னை விரைவில் மந்திரி பதவியிலிருந்து விடுவிக்குமாறும் பண்டித நேருவை, அவர் கேட்டுக் கொண்டிருப்பதாக யு. பி. செய்தி கூறுகிறது.

இந்தியப் பிரதமர் நேருவும், பாகிஸ்தான் பிரதமர் லியாகத்அலிகானும் புதுடில்லியில் கூடிப் பேசி, இந்து-முஸ்லிம்களுக்கிடையே இனியேனும் ஒற்றுமை நிலவ வேண்டும்—புதுவாழ்வு மலர வேண்டும் என்ற எண்ணத்தோடு ஓர் ஒப்பந்தத்தை உருவாக்கினர்.

இது கண்டு மனம் பொருத காரணத்தினலேயே தோழர்கள் முகர்ஜியும், நியோகியும் தமது பதவியை ராஜிநாமா செய்தனர்.

ஒரு நற்பணியை வரவேற்று ஆதரிக்கவேண்டிய இந்த நாடாளவந்த அமைச்சர்கள்—ஆக்க வேலைக்கு அடிகோல வேண்டியவர்கள்— ஒற்றுமையை உருவாக்க கடமைபட்டவர்கள் ஒற்றுமைக்கு குறுக்கே நின்று, அழிவு வேலைக்கு ஆக்கம் தரும்முறையிலே 'ஆ! எங்களைக் கலந்தாலோசிக்காமல் நீங்களே கூடிப் பேசுவதா! எங்கள் கையிலன்றோ ஒற்றுமையை நிலைநாட்டவல்ல கருவி உள்ளது எம்முடைய ஆதரவின்றி, உங்களுடைய முயற்சி நிறைவேறுமா பார்ப்போம்" என்று ஆட்சியாளருக்கு 'சவால்' விடும் முறையிலே, தமது பதவிகளை ராஜிநாமா செய்தனர்.

இப்படிப்பட்ட அமைச்சர்களை— குறைமதியாளரை— ஒற்றுமைக்கு ஊறுதேடுவோரைத்தான் வருந்தி வருந்தி அழைக்கின்றனர் பண்டித நேருவும், பட்டேல்பிரபுவும்.

"வாருங்கள் வாருங்கள். நீங்களன்றி நாங்கள் எங்ஙனம் ஆட்சி நடத்துவது! நாடாளும் திறமையாளர் நீங்களே; உங்களையன்றி வேறு வழியறியோம், வகையறியோம்" என்று வருந்தி வருந்தி, சாமரம் வீசப்பட்டு பதவிக்கு அழைக்கப்படுகின்றனர்.

இந்து - முஸ்லிம் சமரசத்துக்குக் குறுக்கே நிற்பவர்களுக்கு, சம்பந்திகளுக்குச் செய்யப்படும் மரியாதைகள் செய்யப்படுகின்றன.

என்னே விந்தை! ஆசிய நாடுகளின் ஒற்றுமைக்குத் தாங்களே வழிகாட்டிகள் என்று பறைசாற்றித் திரியும் ஆட்சியாளர்— காந்தியப் பாதையிற் சென்று இந்துக்களும் முஸ்லிம்களும் இணைந்து வாழ வழி காட்டவல்லவர்கள் என்று அழைக்கப்படும் ஆட்சியாளர்— பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகானும், இந்தியப் பிரதமர் பண்டித நேருவும் கைகுலுக்கும் காட்சியைக் கதிரவனாகவும், காஷ்மீர் பிரச்சினையைப் பனியாகவும் சித்தரித்துக் காட்டி, புதுடில்லி ஒப்பந்தப் என்னும் கதிரவனின் ஒளிபட்டு காஷ்மீர் பிரச்னை என்னும் பனி விலகி ஓடுவதாகவும் விளக்கம் தரும் ஏடுகளே, எப்படி எதிர்க்கொண்ட ஆட்சியாளர் முகர்ஜியும், நியோகியும் ராஜிநாமா செய்தது கண்டு என்ன செய்திருக்க வேணடும்?

இன்றியமையாப் பணிகள் சட்டத்தின் கீழ் (Essential services act) அவ்விருஅமைச்சர்களையும காவலில் வைத்திருக்க வேண்டும். அவர்களுடைய செயல் நாட்டு

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

பிரகாசத்துக்கு வெற்றி!

விஜயவாடா, ஏப். 16 —

சென்னை சட்டசபை அரசியலில் ஏற்பட்டுள்ள நிலைமை விளக்கும் வகை தோழர் பிரகாசத்தை அழைக்க உதவிப் பிரதமர் தோழர் பட்டேல் இசைந்துள்ளாராம். பண்டித நேருகூட இப்பேச்சில் கலந்து கொள்வாரென்றும் அறிவிக்கப்படுகிறது.

முக்கியமான காங்கிரஸ் தலைவர் ஒருவின் வேண்டுகோளின் பேரில் தான் பட்டேல் இவ்வாறு செய்ய இசைந்தாரென்றும் கூறப்படுகிறது. பிரகாசத்தின்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டால் காங்கிரஸின் நிலையே மிகவு மோசமாகிவிடுமென்றும் பண்டித நேருவும், சர்தார் படேலும் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டு நிலைமையைச் சமாளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதாகத் தெரிகிறது.

ஐ. நா.விடம் சென்று பரிகாரம் தேடுவாராம்

மலானின் நாடுபிடிக்கும் ஆசை

லண்டன், ஏப். 16—

தென்னாப்பிரிக்காவில்பிரிடிஷ் பாதுகாப்பிலுள்ள பிரதேசங்களான பஸுடோலாந்து, புகானலாந்து, ஸ்வாஸிலாந்து முதலியவைகளை, தென்னாப்பிரிக்க சர்க்காருடன் சேர்க்கப்படவேண்டும் என்று, மலான் கோரிக்கை குறித்து பிரிட்டிஷ் சர்க்காருடன் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகும் என்று தெரிகிறது.

இந்த சம்பாஷணை நடைபெற அரசியல் பகைப்புலன் நிலைமை சாதகமாக இல்லை என்று, டெய்லி டெலிகிராப் அரசியல் நிருபர் கூறுகிறார். இப்பிரதேசங்களை மலான் சர்க்காரிடம் மாற்றுவதால், அப் பிரதேசங்களுக்கு நன்மையே ஏற்படும என்பது பார்லிமெண்டில் விளக்கப்படவேண்டும்என்றும், மலான் சர்க்காரின் நிறத்திமிர் கொள்கையைப்பிரிட்டனிலுள்ள எல்லாக் கட்சிகளும் வெறுக்கின்றனர் என்றும், ஆகவே பார்லிமெண்டில் இப்பொழுது இதற்கு ஆதரவு கிடைப்பது கஷ்டமென்றும் கூறப்படுகிறது.

காரியவெற்றிடம் தன் இஷ்டம் நிறைவேறவில்லை என்றால், மலான் இவ் விஷயத்தை ஐ. நா.வுக்கு எடுத்துச் செல்ல தயாராக இருப்பதாகவும் கூறப்படுகிறது இம்மூன்று பிரதேசங்களிலும் 10 லட்சம் பேர்களுக்கு மேற்பட்ட ஜனத்தொகை இருக்கிறது.

—ருளோப்

ஸிட்னி மாநாடுபற்றி 'எகனுமிஸ்டு' யோசனை

லண்டன், ஏப். 10—

தென் கிழக்கு ஆசியாவுக்கு யு. எஸ். பொருளாதாரத் துறையில் உதவி அளிக்க உத்தேசித்திருப்பதை வரவேற்று எகனுமிஸ்ட் பத்திரிகை எழுதுகையில், ஸிட்னியில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டில் அமெரிக்க பிரதிநிதிகளும் கலந்துகொள்ள வேண்டுமென்றும், உடனடியான உருப்படியான உதவியளிக்க வழிவகை தேட வேண்டும் என்றும் வற்புறுத்தியிருக்கிறது.

தங்கத்தை விற்க அனுமதி வேண்டும்

லண்டன், ஏப். 16 —

தென்னாப்பிரிக்காவிலுள்ள தங்க உற்பத்தியாளர்கள் தங்களின் தங்கத்தை விற்க அனுமதி கோரியதற்கு சர்வதேச பாங்கி இணங்காதெனத் தெரிகிறது.

லியாகத் அலி அமெரிக்கப்பிரயாணம்

லண்டன், ஏப். 16—

பாகிஸ்தான் பிரதமர் தோழர் லியாகத் அலிகான் ஏப்ரல் 29-ந் தேதி அமெரிக்க சுற்றுப் பிரயாணத்துக்காகப் புறப்படுகிறார். லண்டனில் சிலகாலம் தங்கி மே 2-ந் தேதி நியூயார்க் செல்வார். தோழர் லியாகத்அலி அமெரிக்க அரசாங்கத்தின் விருந்தினராக இருப்பார். விமானமூலம் பிரயாணம் செய்து சுமார் 12 நகரங்களை தோழர் லியாகத்அலி பார்வையிடுவார்.

பிரகாசம் குழுவினர் மீது நடவடிக்கை?

காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்

புதுடில்லி, ஏப் 16 –

காங்கிரஸ் காரியக்கமிட்டி இம் மாதம் 27ல புதுடில்லியில் கூடும் என்று தெரியவருகிறது.

தோழர் பிரகாசம் குழுவினர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக ஆலோசிக்கப்படும் எனத் தெரிகிறது

உத்தர பிரதேச சட்டசபையில் எதிர்க் கட்சியினருடன் உட்கார்ந்திருக்கும் 24 காங்கிரஸ் எம். எல். ஏக்கள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றியும் ஆலோசிக்கப்படுமாம்.

சில சென்னை எம். எல். ஏக்கள் தாங்கள் அசெம்பிளியில் தனியாக உட்கார்ந்ததற்கு மன்னிப்பு கோரியிருக்கிறார்களே ஒழிய, ஐக்ய மாகாணத்திலிருந்து யாரும் மன்னிப்பு கேட்டிருக்கவில்லை.

கட்டுப்பாடு மீறியுள்ள காங்கிரஸ்காரர்கள் விஷயமாக காங்கிரஸ் காரியக் கமிட்டி கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறதென்றும், அவர்கள் மன்னிப்பு கோராத பட்சத்தில் காங்கிரஸிலிருந்து நிச்சயமாக வெளியேற்றப்படுவர் என்றும் அகில இந்திய காங்கிரஸ் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

மேற்கு ஜெர்மனியில் கம்யூனிஸ்டுகள் முன்னேற்றம்

—(0)—

தடுப்பது குறித்து மூவல்லரசு யோசனை

பெர்லின், ஏப். 16—

மேற்கு ஜெர்மனியில் கம்யூனிஸ்டுகள் ஏராளமாக நுழைந்து வருகின்றனர் என்றும், இதைத் தடுப்பதற்காக என்ன நடவடிக்கைகள் எடுப்பது என்பது பற்றி மூவல்லரசு அதிகாரிகளும், மாதிரிகளும் மூன்று மணி நேரம் இரகசிய ஆலோசனை நடத்தினர் என்றும் கூறப்படுகிறது.

இதைத்தடுக்க புதுஜெர்மன் பெடரல் போலீஸை ஏற்படுத்துவது, எல்லை போலீஸை பலப்படுத்துவது ஆகிய நடவடிக்கைகள் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

பறக்கும் தட்டு

நியூயார்க், ஏப். 16—

சென்ற மூன்று வருஷங்களாக திடீர் திடீர் என்று தோன்றிவரும் பறக்கும் தட்டுகள் அமெரிக்கனின் ரகசிய ஆயுதங்களல்லவென்றும் அல்லது வேறு இடங்களிலிருந்து அனுப்பப்பட்டவையல்லவென்றும் யுனைடெட் ஸ்டேட்ஸ் நியூஸ்மாகஸின் ஆசிரியர் டேவிட்லாரன்ஸ் கூறுகிறார். இவைகளில் ஆட்கள் யாரும் கிடையாதென்றும், வருங்கால யுத்தங்களில் பறக்கும் தட்டுகள் என்ன முக்கிய பங்கை எடுக்கப் போகிறதென்பது சீக்கிரமே தெரியவரும் என்றும் அவர் கூறுகிறார்.

மாலை மணி

சென்னை 17—4—50 திங்கட்கிழமை

வாழ்க புரட்சிக்கவிஞர்

"நான் என்ன தமிழ் நாட்டிற்குச் செய்துவிட்டேன். ஒன்றும் சிறப்பாக செய்யவில்லை. தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் நான் ஏதாவது செய்யவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருப்பேனேயானால், அதுதான் திருக்குறளை, உள்ளது உள்ளவாறே மக்கள் உணரும்படி செய்வதாகும். அதற்கு உரை எழுத முனைந்துள்ளேன். எழுதி முடித்துவிட்டால், என் கடமையைச் செய்து முடித்தவனவேன்"

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், அண்மையில் நண்பர்களிடம் வெளியிட்டதாகக் கேள்வியுற்றோம். அந்தச் செய்தி தமிழகத்தாரனைவரையும் இன்ப ஊற்றுக் கேணியில் மூழ்கி எழச்செய்வதாகும். புரட்சிக்கவிஞர் அவர்கள் ஆற்றி முடிக்க எண்ணியிருக்கும் அரும்பெரும் பணியினல், தமிழ் வளர்ச்சியுறும்; தமிழகம்பெருமை கொள்ளும், தமிழர்கள் பூரிப்படைவர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

திருக்குறளுக்கு உரை எழுதும் அரிய ஆவலுணர்ச்சியை உள்ளத்தே தாங்கிக் கொண்டிருக்கும் புரட்சிக் கவிஞராகிய கனகசுப்புரத்தினம் அவர்கள், இன்றைய நாளில் ஐம்பத்தொன்பதாவது ஆண்டின் எல்லைக் கோட்டைத்தாண்டி, அறுபதாவது ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ளார். அவரது வைரமணி விழா அடுத்த ஆண்டு ஏப்ரல் 17-ம் நாள் வருகிறது. புரட்சிப்புலமை ஒளியை வைர மணி ஒளியோடு இணைத்து உலகுக்குக் காட்டும் அந்த மணிவிழா நாளை நமக்கு, ஓராண்டிற்கு முன்பே நினைவு படுத்துவதாக அமைந்துள்ளது இவ்வாண்டின் கவிஞர் பிறந்த நாள்.

பிறந்த நாளன்று, கவிஞரின் வாழ்க்கையில் உருண்டோடிய ஆண்டுகளைக் கணக்கிட்டு, அந்தக் காலத்தில் அவர் ஆற்றிய அரும்பெருந் தொண்டுகளைத் தொகுத்துணர்ந்து பேருவகை கொள்கிறோம். வேறுயாரிடத்திலும் வாய்க்கப்பெருத அரும்பெரும் புலமைச் சிறப்பு, அவர்பால் அமைந்திருப்பதைக் காணவே பேருவகைப் பூக்கிறது. அவர் வாழ்கின்றபோதே நாமும் வாழ்கிறோம் என்று எண்ணும் போது, உவகை மகிழ்ச்சியாக மலர்கிறது. மகிழ்ச்சியை அக் கவிஞர் பெருந்தகைக்குக் காணிக்கையாகச் செலுத்துகிறோம், அது உள்ள உறுதியும், உடலுறுதியும் அன்னுருக்குப் பயக்கும் அருமருந்தாகும் என்ற முறையில்.

புரட்சிக் கவிஞர் அவர்கள் தமிழகத்தில், ஏன் இந்தியத் துணைக் கண்டத்திலேயே, ஈடும் எடுப்பும் அற்ற மாபெரும் கவிஞராய் வெற்றி வலம்புரிந்துவருபவராவார்கள். அவரது புகழொளி நாடெங்கும் பரவுதல்கூடாது என்ற இழிந்த மனப்பான்மையோடு, மாற்றுக் கட்சியினரால் வீசப்பட்ட புகைப்படலங்கள் எண்ணிறந்தவைகளாகும் அவற்றையெல்லாம் கிழித்துக்கொண்டு, முகிலைக் கிழித்தெழும் ஒரு முழுமதியென தமிழ் வானிலே தன்னிகரற்று ஒளிர்விட்டு நீந்தி விளையாடிக்கொண்டிருக்கிறார். பிற்போக்கு மனப்பான்மைபடைத்த எழுத்தாளர்களால், வஞ்சகம், சூது, சூழ்ச்சி, பொறாமை எல்லாம் கவிஞரின் பெருமையையும், புகழையும் அழிக்க வீசப்பட்டன. எல்லாம், வீசப்பட்ட அந்தப் பொழுதிலேயே தூள் தூளாக்கப்பட்டன. அறிவாற்றலால், எதிர் முகாம்கள் எல்லாம் அவரிடம் இப்பொழுது சரணடைந்துவிட்டன. அவருடைய புலமையை மறுப்பவன் அவனியில் எவனுமில்லை, எனும் நிலை இப்பொழுது ஏற்பட்டுவிட்டது. அப்படிப்பட்ட புரட்சிக்கவிஞர் நம் பாசறையின் மணி விளக்காய் விளங்குகிறார் என்பதை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும், மகிழ்ச்சி வெள்ளம் பொங்கி எழுந்து, விளிம்பு முட்டி வழிந்தோடுகிறது! "வாழ்க அவர்" என்று பல்லாண்டு கூறி வாழ்த்த விரும்புகிறோம்!

புரட்சிக் கவிஞர் அவர்கள் புலமைக்கு மட்டுமல்லாமல், அஞ்சா நெஞ்சத்துக்கும்சிறந்த எடுத்துக்காட்டாவார்கள். அவர் அடிக்கடி பிறர்க்குக் கூறும் அறிவுரை "உண்மையைக்கூற அஞ்சாதே" என்பதேயாகும். எதற்கும் யாருக்கும் அஞ்சாமல் எடுத்துக்கூறும் பண்பைத்தாம் ஏற்றுக்கொண்டதால்தான், தாம் இந்த அளவு நிலைக்கு வரமுடிந்தது என்பதை, அவர் பணமுடிப்பு வழங்கும் விழாவில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து இனிதே அறியக்கூடும். எதையும், எவர்க்கும் அஞ்சாமல் எந்த இடத்திலும் எடுத்துக் கூறும் ஆற்றல், அவருக்கு அமைந்ததைப்போல, வேறோர் புலவரிடத்தில் காண்டல், மிக மிக அரிதாக இருக்கிறது.

நூறுண்டு நூற்றாண்டாகத் தமிழ் இலக்கியங்களில் கறைகளாக இருந்துவந்த கருத்துக்களை, அப்படியே தலைகீழாகக் கவிழ்த்து விட்டு, காலத்திற்கேற்றப் புத்தம் புதிய கருத்துக்களைப் புரட்சி முறையில் மாற்றியமைக்கும் பண்பு, பாரதிதாசன் ஒருவரிடத்தில் மட்டுமே திறம்படக் காணுவதால் தான், அவரைப் புரட்சிக்கவிஞர் என்ற அடைமொழிகொடுத்து அழைக்கிறோம்

எளிமை, அழகு, இனிமை, வீரம், நகைச்சுவை, அவலச் சுவை முதலிய எல்லாம் அவருடைய பாடல்களில் கொழித்துக் குலுங்குகின்றன சொல்லழகு, பொருளாழம், கருத்துத் தெளிவு, ஓசைநயம் இன்னபிற அவரது பாடல்களில் அமைந்திருக்கும் வண்ணம், இற்றைக் காலப் புலவர்கள் எவரிடத்தும் காண முடியாது. அத்துணையளவு யாரும் எட்டிப் பிடிக்க முடியாத வகையில் உயர்ந்தோங்கி, இசை உமிழ்ந்து நிற்கிறார்.

புரட்சிக்கவிஞர் பகுத்தறிவுப் பாசறையில் உலவுகிறார் என்பதே நம்மனோர்க்கெல்லாம் பெருமையும், பூரிப்பும் அளிப்பதாகும். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வளம் வாய்ந்த கருத்துக்கள், அவர்கள் பாடல்களிலே இறுமாந்து நின்று, வீரம் பேசுகின்றன. அத்தகைய கருத்துக்கள் தாம் நம்மையெல்லாம் விடுதலை வீரர்களாக்குகின்றன. மேன் மேலும் பாடல்கள் எழுதி, வீழ்ச்சியுற்றத் திராவிடத்தை எழுச்சி கொள்ளச் செய்ய அவர்கள் இன்னமும் பல்லாண்டு காலம் வாழவேண்டுமென்று வாயார—மனமார வாழ்த்துகிறோம்.

திருக்குறளுக்கு உரை எழுதி உண்மையான வள்ளுவரை உலகறியச் செய்யும் ஆற்றல் அவர்பால் நிரம்பிக் கிடக்கின்றது என்ற காரணத்தால்தான், அவர் தொடங்கி இருக்கும் அந்த நற்பணியினைப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம், விரைவில் எழுதி முடித்துத் தாருங்கள், என்று தாழ்மையாக அவர்களை வற்புறுத்துகிறோம்.

அடுத்த ஆண்டு மணி விழாக் கொண்டாடும்போது, நாட்டிற்குத் தங்கள் காணிக்கையாக திருக்குறள் உரையைத் தாருங்கள் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்அவர்களை, இந்த வேளையில்உரிமையோடு வேண்டிக்கொள்கிறோம்.

வாழ்க பாரதிதாசன்!
வாழ்க அவரது புரட்சி உள்ளம்!

ஆசிரியர்களுக்கு "வீட்டு வேலை" பயிற்சி

மே, ஜூன் மாதங்களில் பள்ளி ஆசிரியர்களுக்கு வீட்டுவேலைகளில் 30 நாள் பயிற்சி அளிக்கத் திட்டமிட்டு, 10 இடங்களில் பயிற்சி முகாம்கள் அமைக்க சர்க்கார் ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிகிறது.

பஸ் டிரைவர் மறைவு

சென்ற 10-ந் தேதி மைலாப்பூர் பஸ்ஸில் வேலை செய்துகொண்டிருக்கையில் மாரடைப்பின் காரணமாக பஸ் டிரைவர் தோழர் வி. எஸ் குமார் என்பவர் திடீரென மரணமடைந்தார். இது குறித்து பஸ் தொழிலாளர்கள் துக்கந்தெரிவிப்பதற்காக பஸ் தொழிலாளர் சங்கம் மூடிவைக்கப்பட்டது. மரண சடங்கிற்கு ஏராளமான தொழிலாளர்கள் போயிருந்தனர்.

அவசர நிலைமையை சமாளிக்க அதிகபணம்தேவை

ட்ரூமன் கோரிக்கை

லண்டன், ஏப். 16—

மிரட்டல் போரில் ஏற்படக் கூடிய புது அவசர நிலைமையைச் சமாளிக்க அதிகப் பணத்தை ஒதுக்கும்படி காங்கிரசிடம் பிரசிடெண்ட் ட்ரூமன் கோருவார் என்று இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு, பாதுகாப்புச் செலவைப் பாதுகாப்பு மந்திரி லூயிஜான்ஸன் குறைத்திருப்பது சரியல்லவென்று கூறப்படுகிறது.

அனுவசியமான செலவுகள் ட்ருமனின் உத்திரவுப்படியே குறைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

மேற்கு ஐரோப்பாவைக் காப்பது பற்றி அமெரிக்க கொள்கையை யு. எஸ். சேனதிபதி ஓமர்பிரரட்லி, வெளியிட்டிருப்பது, ரஷ்யாவை எச்சரிப்பதாகும் என்றே கருதப்படுகிறது.

அரசியல் ஆக்ரமிப்பு ஏற்படாமல் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதென்றும், யுத்தம் ஏற்படாமல் அட்லாண்டிக் உடன்படிக்கையே தடுத்துவிடும் என்றும் அவர் கூறுகிறார். தென்கிழக்கு ஆசியநாடுகளுக்குப் போதிய அளவுக்கு உதவியளிக்கப்படும் என்பது வெளிப்படுத்தப்பட்டிருப்பது திருப்தியை அளித்திருக்கிறது.

எத்தகைய உதவி?

ஆசியாவுக்கு உதவி ஆயுதங்களை அனுப்புவதின் மூலம் செய்யப்பட வேண்டும் என்று டாக்டர் ஜெஸ்லப் சிபார்சு செய்யவில்லை. ஆசியா நாடுகளில் வாழ்க்கைத்தரம் உயர பொருளாதாரத் துறையில் உதவியும், கொரில்லா நடவடிக்கை அடக்குவதற்கான உதவியையும் அமெரிக்கா அளித்தாக வேண்டும் என்று அவர் வற்புறுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

யு. எஸ். ராஜாங்க இலாகாவின் புதுவித தந்திரக் கமிட்டியின் தலைவராக, டாக்டர் ஜெஸ்லப் நியமிக்கப்பட்டிருப்பது திருப்தியுடன் வரவேற்கப்படுகிறது.

சோஷலிஸ்டு கட்சி மாநாடு

புதுடில்லி. ஏப் 16—

சோஷலிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடு சென்னையில் ஜூலை 8 தேதி முதல் 12 வரை நடைபெறுகிறது. இதற்கு மூலப்மேழுதா தலைமை வகிப்பார் என்று தெரிகிறது.

சோஷலிஸ்ட் கட்சியின் புது சட்டதிட்டப்படி தேசியமாநாட்டின் தலைவராக யார் இருக்கிறார்களோ அவரவர்களே அந்த வருஷத்திற்கு, கட்சியின் தலைவராக இருக்க வேண்டும். இதுவரை கட்சியின் பொதுக்காரியதரிசியே கட்சியின் தலைவராக இருந்து வந்திருக்கிறார். மேழுதா தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்படுவார் என்று தெரிகிறது.

நாணய மதிப்பு குறையவேண்டும்

லண்டன், ஏப். 16—

நாணய பரிவர்த்தனை விஷயத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயுள்ள தகராறுகள் நீங்கவேண்டும் என்றால், பாகிஸ்தான் தன் நாணயமதிப்பை இந்தியாவைப்போல் குறைத்தேயாக வேண்டும் என்று ஸ்டேடிஸ்ட் பத்திரிகை கூறுகிறது.

சிலகாலமாகவே பாகிஸ்தானின் வியாபாரம் குறைந்து வருகிறதென்றும், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே வர்த்தகம் அடியோடு நின்று விட்டதென்றும், ஆகவே மேலும் பல நிலைகள் ஏற்படுமுன் பாகிஸ்தான் தன் நாணய மதிப்பைக்குறைப்பதல்லதல்லவா என்பதைப்பற்றி தீவிரமாக யோசிக்கவேண்டும் என்றும் அப்பத்திரிகை வற்புறுத்துகிறது.

மனிதன் குரங்கிலிருந்து தோன்றியவன் தான்

டார்வின் கொள்கையே முடிவானது

ஆராய்ச்சியாளர்டாக்டர் ப்ரூம்கருத்து

ஜோஹென்னஸ்பர்க், ஏப். 16—

மனிதன் குரங்கிலிருந்து தோன்றியவன்தான்என்றும்டார்வின் வெளியிட்ட இக்கொள்கை உண்மைதான் என்பது ஏற்பட்டுவிட்டது என்று மனித வம்ச ஆராய்ச்சி நிபுணர் டாக்டர் ப்ரூம் கூறுகிறார்.

சென்ற 25 ஆண்டு காலமாக செய்யப்பட்டு வந்த ஆராய்ச்சியின் விளைவாக, மனித வம்ச ஆரம்ப காலம் தென்னுப்பிரிக்காவில் தான் இருந்திருக்க வேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.

1925-ல் புரபஸர் ரேமாண்ட் டார்ட் என்பவர் இதற்கான முதல் ஆதாரங்களை ஸெயிண்ட்டாங்ஸ் என்ற இடத்தில் கண்டுபிடித்தார். அதன் பின் கண்டுபிடிக்கப்பட்ட மண்டையோடுகள், எலும்புகள் இவைகளிலிருந்து டார்வின் வெளியிட்ட கொள்கை தான் சரியானது என்பது தெளிவாகிறது.

குரங்குகளிலிருந்து மனிதன் தோன்றினன் என்பது நிச்சயமாகி விட்டாலும் எந்தக் கட்டத்தில் குரங்கிலிருந்து மனிதனுக மாறியதென்பது இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்றும் அவர் கூறினர்.

ஹோனுன் மாகாணத்தில் பஞ்சம்

ஹாங்ஹாங், ஏப். 16—

செஞ்சீனவில் முக்கியமாக ஹோனுன் மாகாணத்தில் சமிக்க முடியாத பஞ்சநிலை ஏற்பட்டிருப்பதாக இங்கு தகவல்கள்கிடைத்திருக்கின்றன. 7500,000 மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் இதில் 400,000 பேர் இம்மாகாணத்தை விட்டு வெளியேறிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

19-4-50

வனவாசி:—என். வி நடராசன்.

21-4-50

நாகர்கோவில்:—மு கருணாநிதி

"கோழியே கெடிகாரம், கோட்டானே தாலாட்டு"

நிகண்டு ஏன், திருவாய்மொழி ஏன் தொழிலாளிக்கு?

புராண மங்கையராகத் தாய்மார்கள் இருந்தது போதும்

இந்து சட்டத் திருத்த மசோதா ஆதரிப்புக்கூட்டத்தில் அண்ணாதுரை

(நேற்றைய தொடர்ச்சி)

ஜடாமுடி சாமியார் சாபம் தந்துவிடுகிறேன் என்கிறார், சென்னையில் அல்லாடி வீயில். சென்னையில் நடைபெறுது நாமிநக்கம் காரணத்தால். முதலாளித்துவ முகாம் தன் பக்கத்தில் இழுக்க, தொழிலாளிகள் தங்கள் பக்கத்தில் இழுக்க, பகுத்தறிவுவாதிகள் தங்கள் பக்கம் சாயும்படி செய்ய, சனாதனிகள் சலிக்காமல் கைப்பற்ற முயல காங்கிரஸ் சர்க்காரே கலகலத்துவிட்டது.

மசோதாவை எதிர்க்க யாருக்குமே காரணம் இல்லை. ஆணும் பெண்ணும் சமசந்தர்ப்பம்பெறவேண்டும். பண்டித நேருவும், அவர் தங்கை விஜயலட்சுமியும் முன்னேறவில்லையா? பெண்கள் முன்னேற்றத்துக்குத் தடையாக இருப்பதை நீக்கு. சீதை, நளாயினி, இன்னும் புராண மங்கையராக இருந்தது போதும். மாதரை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துங்கள்.

மதம் கெட்டுவிடுமென்று சனாதனிகள் கூச்சலிடுகின்றனர், நான் கேட்கிறேன் இம் மசோதா கொண்டுவராவிட்டால் மதம் கெடாதா வென்று? 15 ஆண்டுகளுக்கு முன் எவ்வளவு பேர் நாமம், திருநீர் இடுவார்கள்? இன்று எவ்வளவுபேர் இடுகிறார்கள்? நாமென்ன நாமம் ஒழிப்பு மாநாடா நடத்தினோம்? பாடுபட்டான் தொழிலாளி, வியர்வையில் கரைந்துவிட்டது நாமும் திருநீறும். பின்பு அவனுக்கு நேரமில்லை அதைப் பூசிக்கொண்டிருக்க. கோழியே கெடியாரம், கோட்டானே தாலாட்டு; நிகண்டு ஏன், திருவாய் மொழியேன் தொழிலாளிக்கு? இந்நிலையிருக்கையில் மதம் போய்விட்டதென்று கூறுவதா? எதைக் காப்பாற்றிவிட்டீர்கள்? எதைக் காப்பாற்றப்போகிறீர்கள்? மதம் போச்சு என்று சொன்னால் நம்ப மக்கள் தயாராக இருக்கிறார்களா? பிழைப்புக் கெட்டுவிடும் என்ற பயத்தாலே சிலர் அவ்வாறு கூறுகிறார்கள். கடல் கடந்து போவது பாவமென்று கூறுகிறது பிராமண மதம். அப்படியென்றால் சர். சி. பி. ராமசாமி அய்யரை மதப் பிரஷ்டம் செய்துவிட்டார்களா? அல்லது ஜாதி விட்டு, காந்தியாரின் மகனை மணந்துகொண்ட தோழர் ராஜகோபாலாச்சாரி மகளுக்குத்தான் ஏற்பட்டதா அந்த ஆபத்து? மதத்தின் பிடி முன்னேற்றக்கொள்கைகள் பரவுமானால், அழிந்து விடுவது இயற்கை. காற்றடிக்கு நேரத்தில் ஆடையை அணைத்துப் பிடித்துக்கொள்ளலாம். அதற்காகக் கதவடைத்து விடக்கூடாது. சனாதனம் முற்போக்குப் பாதை அமைக்கச் செய்யப்பட்ட எதையும் தடுக்காமல் இருந்ததில்லை. உடன் கட்டை ஏறும் வழக்கத்தைத் தடுக்கச் சட்டம் செய்தபோது லத்த எதிர்ப்பு. சில பெண்கள் தம் தலைவிதி இப்படியென்று தானாகச் சாகலாம். பலர் உடன்பட மாட்டார்கள். "உன் பதி இறந்துவிட்டான்; நீ சதியாகித்தான் தீர வேண்டும்; உன் கணவன் மேலுலகத்துக்குச் சென்று உன்னைக் காணவிட்டால் தவறாக நடந்துகொள்வான்" என்று கூறி, மங்கையரை மாண்டவர்களோடு வைத்துச் சுட்டுக் கொன்றார்கள். இப்பழக்கத்தைத் தடுக்கக் கொண்டுவந்த சட்டத்துக்கு எதிர்ப்பு! சாரதா சட்டத்தின் போது எதிர்ப்பு! தேவதாசி சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு தான் நடையே நாட்டியம், பேச்சே பாட்டாக இருக்கிறது, மைலாப்பூர்வட்டாரங்களில். அப்பொழுது எதிர்த்ததுபோன்றுதான் இன்றும் எதிர்ப்பு. எக்கட்சியினராயினும் சரி ஒன்றாக வேண்டும், பேதங்களைக் களைந்து மொத்தத்தை உயர்த்தி நாட்டின் நிலையை உலக மன்றத்தில் உயர்த்தவேண்டும். சில மாதர்கள் சங்கம் இந்துசட்டதிருத்த மசோதாவை எதிர்த்துத் தந்தியனுப்புகிறார்களாம். எவ்வளவு கேலி!

மனைவி தேவையற்றவள் என்று டாக்டர் கூறும் வரை ஒருவன் வேறு மணம் செய்துகொள்ளக்கூடாதென்று இந்து சட்டத் திருத்த மசோதா கூறுகிறது. இதை எதிர்க்கிறார்கள் தாய்மார்கள்! தாய்மார்களின் எதிர்ப்பிருக்கிறதென்று கூறக் கையெழுத்து வாங்கப்படுகிறதாம் மைலாப்பூரில்! கலாசாரம் சீர்கெட்டுவிடுமே என்று கனபாடிகள் கதறுகின்றனர். இப்பொழுதுமட்டும் என்ன வாழ்கிறது? எங்கு கண்டாலும் புருடன் மனைவி சச்சரவு.

தகப்பன் பணக்காரனாயிருந்தாலும், பெண்ணுக்குச் சொத்துரிமை கிடையாது. பெண் ஒரு கிராமத்தில் குடிசையில் இருப்பாள் ஒரு ஏழையை மணந்து கொண்டாள் என்ற காரணத்தால் அவள் கையில் கண்ணாடி வளையல், இடுப்பில் கிழிந்த சேலை; வயிற்றில் ஆறுமாதக் குழந்தை, அண்ணன் காரில் வருவான் தங்கையைப் பார்க்க. இதைப்போல் ஆவாள் என்று நான் கனவில் கூடக் கருதவில்லை யென்று அங்கலாய்ப்பான் அண்ணன். என் தலையெழுத்து இப்படி இருக்கிறது, நீங்கள் வருத்தப்படாதீர்கள் என்று ஆறுதல் கூறுவாள் தங்கை. ஐந்து ரூபாய் நோட்டொன்றை நீட்டுவான்; வேண்டாம் அண்ணா என்று கூறுவாள் பெண். பணத்தையே பார்க்காமல் பக்கத்தில் நிற்கும் குழந்தையிடம் கொடுத்துவிட்டுச் சொல்லாமல் கூடப் புறப்பட்டு விடுவான்! பெண்ணுக்குச் சொத்துரிமை இருந்தால், கண்ணீரும், கம்பலையுமாகப் பணக்காரக் குடும்பத்தில் பிறந்த அப்பெண்ணுக்கு இந்நிலை ஏற்படுமா? பெண்ணுக்குச் சம உரிமையிருந்தால், அரிச்சந்திரன் சந்திரமதியை விற்றிருப்பானா? பெண்களுக்குச் சொத்துரிமை இருந்திருந்தால், எந்தப் புராணமும் இரண்டு அத்தியாயங்களுக்கு மேல் வளர்ந்திருக்காது.

ஆண்களைப் பொருத்தவரையில், இந்துச் சட்டம் இருக்கவேண்டியதுதானென்று நான் கூறுவேன். ஆனால் பெண்கள் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டு உரிமைப்போராட்டம் நடத்தவேண்டும். பெண்கள் முன்னேறினால்தான், நாகரீக சமுதாயம் என்று வெளியுலகம் ஏற்கும். மசோதாவை ஆதரித்து ஆளுக்கொரு தந்தி அனுப்ப வேண்டும்', என்று கூறி முடித்தார். (ந-ழி)

அனுப்பிவிட்டீர்களா?

தோழர்களே! முற்போக்காளர்களே! முன்னேற்றக் கழகங்களே!

இந்து சட்டத்திருத்த மசோதா குறித்து உங்களுடைய ஆதரவு செய்திகளை டாக்டர் அம்பேத்காருக்கு அனுப்பிவிட்டீர்களா?

புதுடில்லி மாநாடு கூடும் தேதி ஏப்ரல் 20.

இதுகாறும் அனுப்பத் தவறியவர்கள் இன்றே, இப்பொழுதே அனுப்புங்கள், (ஆ-ர்)

ஏப்ரல் 17

கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாள்!

இந்நாளில், "புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பல்லாண்டு வாழ்க" என்று வாழ்த்துகூறி மகிழ்கிறது திராவிடம்!

அந்த மகிழ்ச்சி அவருக்கு மேலும் மேலும் உறுதியைத் தருவதாகுக!

தமிழகத்துக்கு இதுகாறும் அவர் தந்துள்ள நூல்கள்

பாரதிதாசன் கவிதைகள் I	இரணியன்
பாரதிதாசன் ,, II	சேரதாண்டவம்
பாண்டியன் பரிசு	படித்த பெண்கள்
அழகின் சிரிப்பு	காதலா? கடமையா?
எதிர்பாராத முத்தம்	கடல்மேற்குமிழிகள்
காதல் நினைவுகள்	ஏற்றப் பாட்டு
குடும்ப விளக்கு (நான்கு பாகங்கள்)	திராவிடர் திருப்பாடல்
தமிழ் இயக்கம்	நல்லமுத்துக் கதை
நல்ல தீர்ப்பு	இந்தி எதிர்ப்புப் பாட்டு
இசை அமுது	குயில் 12 குரல்கள்
சௌமியன்	ஆத்திசூடி
முல்லைக்காடு	தமிழச்சியின் கத்தி
இருண்ட வீடு	கற்கண்டு
அமைதி	புரட்சித் திருமணத் திட்டம்

"கும்பமேளா" கோலாகலம்!

30 பேர் மாண்டனர்; பலர் காயமுற்றனர்

மூடநம்பிக்கைக்கு அரசியலார் ஆதரவு!

ஹரித்துவாரில் 12 ஆண்டுக்கொருமுறை நடைபெறும் 'கும்பமேளா' என்னும் தலைமுழுக்குவிழா கடந்தவெள்ளிக்கிழமையன்று நடைபெற்றது. சாகா வரம் பெறலாம் என்ற மூட நம்பிக்கை காரணமாக தலை முழுகச் சென்ற மக்கள் கூட்டத்தில், 30 பேர் மிதியுண்டு இறந்தனர். இறந்தவர்களில் 26 பேர் பெண்கள்.

இந்த விழாவுக்கு இந்திய சர்க்கார் தமது அமோகமான ஆதரவை அளித்துள்ளனர். சர்க்காரே 36 லட்ச ரூபாய் இவ் விழாவிற்கென செலவிட்டிருப்பதாக சொல்லப்படுகிறது.

இவ்விழா நடைபெற்ற இடத்தில் 18 தந்தி நிலையங்கள், 12 தபால் நிலையங்கள் 50 புதிய டெலிபோன் இணைப்புகள், தனி ரயில் போக்குவரத்து ஏற்பாடு இன்னபிற வசதிகளனைத்தும் இந்திய அரசியலாராலேயே செய்து தரப்பட்டிருக்கிறது.

இத்தலைமுழுக்கு விழாவில், பலர் நிர்வாணமாகச் சென்று தலைமுழுகிய காட்சியை மக்கள் குழுமி இருந்து கண்டனராம்.

மனப்போக்கு...!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நன்மைக்கு உகந்தது அல்ல என்ற காரணம் காட்டி.

இதுதான் ஒரு உண்மையான ஜனநாயக சர்க்கார் செய்திருக்க வேண்டிய வேலை. ஆனால் செய்யவில்லை. அப்படிச் செய்யாததுகூட குற்றமில்லை. ஆட்சியாளர் மேற்கொண்ட நற்பணிக்குக் குறுக்கே நின்றவர்களை வருந்தி வருந்தி அழைக்கின்றனரே, அதுதான் பெருங்குற்றமாகும். இதனால் ஆட்சியாளரைப் பற்றி மக்கள் என்ன எண்ணக்கூடும் 'ஓ, நியாயமில்லையெனில் நமது மந்திரிகள் தமது பதவியையே துறந்திருப்பர்' என்றே எண்ணுவர். அந்த எண்ணம் வலுப்பெற்றால், ஆட்சியாளர் மேற்கொள்ளும் பணியின் சிறப்பு குன்றும். பணிச் சிறப்பு குன்றுமேல், பழைய நிலைமையே நீடிக்க நேரிடும். எனவேதான் ராஜினாமா செய்த அமைச்சர்களுக்கு ஆதரவு காட்டுதல் தீது என்பதைச் சுட்டிக்காட்டுகிறோம்.

ஆட்சியாளரும் பிறநம் பதவியை விட்டுவிலகிய சிலர்களை வருந்தி வருந்தி அழைக்கும் காரணத்தாலேயே, இன்று அவர்கள் 'பிகு' பண்ண ஆரம்பித்திருக்கின்றனர்.

பல இடங்களிலிருந்து கிடைத்த வேண்டுகோள்களை நன்றாக ஆராய்ந்து பார்த்துத் தம்முடைய மனதை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று தோன்றுவதாக தைரியமாகச் சொல்லுகிறார் முகர்ஜி!

நாம் மேலே குறிப்பிட்டிருப்பது போல், ஆட்சியாளர் தக்க நடவடிக்கை எடுக்க தீவிர நோக்கம் படைத்தவர்களாக இருப்பின் முகர்ஜிகள் இங்ஙனம் வாலாட்டத் துணிவார்களா?

எனவே, ஆட்சியாளர் இனியேனும் இத்தகைய வழவழா போக்கைக் கைவிட்டு, நாட்டு நலத்துக்கு குறுக்கே நிற்போர் எவராயிருபினும் அவர்களைப் புறக்கணித்துவிட்டே சற்றுத் துணிவைத் துணைகொண்டு, புத்துலகை நோக்கி விரைந்து முன்னேறுவார்களாக!

தி. மு. கழகக் கிளைகள்

சல்லிப்பட்டி—சிற்றூர்க்கிளை

சல்லிப்பட்டி, ஏப். 10—

இவ்வூர் திராவிட முன்னேற்ற கழக அமைப்புக்குழுக் கூட்டம் 7—4—50 அன்று தோழர் பி. ராமநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக்கழகம்—சல்லிபட்டி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டது. பின்னர் கீழ்கண்டசெயற்குழுவினர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—த. சீனிவாசன், பொருள்உறுப்பினர்:ரா.- கோபால்சாமி, விளம்பர உறுப்பினர்:— தி. கோவிந்தராசன்,

ஏனைய செயற்குழுவினர்:—ரா. ராமசாமி, ரா. பழனிசாமி, ஆ இலக்குமணன், க. திருவேங்கடம், தி. வெ. கோவிந்தராசன்.

• • •

சித்தளந்தூர்-சிற்றூர்க்கிளை

திருச்செங்கோடு, ஏப். 13—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் 9-4-50 அன்று மாலை நடைபெற்றது. கூட்டத்தில் "திராவிட முன்னேற்றக் கழகம், சித்தளந்தூர் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, பின்னர் கீழ்க்கண்ட செயற்குழு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-கி. கே. வாசுதேவன். துணைச்செயலாளர்:-கே. குமாரசாமி, விளம்பர உறுப்பினர்:- ஆர். முத்து, பொருள்உறுப்பினர்:- எஸ். பெருமாள். ஏனைய செயற்குழு உறுப்பினர்:-ஆர். நடேசன், சி. எம். சதாசிவம், வி. செல்லமுத்து, சி. கே. இராமசாமி. எஸ். இராமசாமி, ஏ. முனிசாமி ஏ. வேல்சாமி. முடிவாகத்தோழர் முத்து நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

பாளையங்கோட்டை—நகரக்கிளை

பா. கோட்டை, ஏப். 8—

திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்டம், தோழர் வி. பி. நாதன் அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது தலைவர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தோற்றத்தின் அவசியத்தைப்பற்றியும், அதன் கொள்கையினையும்எடுத்துரைத்தார்கள். கூட்டத்தில் 'திராவிட முன்னேற்றக் கழகம்—பாளையங்கோட்டை நகரக்கிளை" அமைக்கப்பட்டது.பிறகு கீழ்கண்டசெயற்குழு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது.

செயலாளர், பொருளாளர்:- வி. பி. நாதன்; துணைச்செயலாளர்:- ராசப்பையா. ஏனைய செயற்குழுஉறுப்பினர்கள்:—விக்டர்பூரணம், எஸ் சேது, ஆ. பாலகிருட்டிணன், கணேசன், ர. தவம்.

தீர்மானங்கள்:—மே 5-ல் துவக்க விழா நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

துவக்கவிழாவிற்குப், பின்னர் பாளையங்கோட்டையைச் சுற்றியிருக்கும் கிராமங்களில், தி.மு.க. கொள்கைகளைப் பரப்பப் பிரசாரம் செய்யவேண்டுமென முடிவு செய்யப்பட்டது. தலைவர் அவர்கள்நன்றி கூறுதலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

* * *

சிந்தாதிரிப்பேட்டை 30-வட்டம் நகரக்கிளை

சென்னை, ஏப். 10—

9—4—50 ஞாயிறு இரவு, 18 பாலகிருஷ்ணப் பிள்ளை வீதியில் தி. மு. க. அமைப்புக் கூட்டம் நடைபெற்றது,அதுபோதுதோழர் ஆர். எஸ். மணி, அவர்கள் கட்சி நோக்கத்தைப்பற்றி பேசுகையில். தி. மு. கழகத்திற்கும், தி. கழகத்திற்கும் யாதொரு பேதமும், பகையுமில்லையென்றும, தி. மு. க. வின் நோக்கத்தையும் விளக்கிப் பேசினார். பிறகு, "திராவிட முன்னேற்றக் கழகம்—சிந்தாதிரிப்பேட்டை, நகர உட்கிளை' 30 வது வட்டம நிறுவப்பட்டது, கீழ்க்கண்டசெயற்குழு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—கே. ஜெயராமன், துணைச் செயலாளர் எட்வர்டு பொருள் உறுப்பினர்—முனுசாமி ஏனைய செயற்குழுவினர்—ஆர்.எஸ் மணி, ஆர். ராகலிங்கம். முடிவாகத் தோழர் பி. தேவராஜன் நன்றி கூறிய கூட்டம் இனிது முடிவுற்றது.

• • •

ஆய்க்கவுண்டன் பாளையம்—சிற்றூர்க்கிளை

ஆ. க. பாளையம், ஏப். 4—

30—3—50 அன்று மாலை 4 மணியளவில் தோழர் கொ. சுப்பையன் அவர்கள் தலைமையில் தி. மு. க. ஆதரவாளர்கள் கூடினர். அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம் ஆய்க்கவுண்டன் பாளையம் சிற்றூர்க் கிளை"நிறுவப்பட்டு. கீழ்க்கண்ட செயற்குழு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-பெ. மு. ராமசாமி, உதவிச் செயலாளர்:- ஏ. க. பழனிசாமி, பொருள் உறுப்பினர்:- பு.க. நாச்சிமுத்து விளம்பர உறுப்பினர் வெ. முத்து. ஏனைய செயற்குழு உறுப்பினர்:- மா. ராமசாமி, மா. முத்துசாமி, கா. சின்னசாமி ரா. சின்னசாமி, கிருஷ்ணசாமி. ஏ. க. ராமசாமி, ஒ. நாச்சப்பன், தி. மு. ராமசாமி, கி முத்துசாமி. செ. நாச்சப்பன், ஏ. ரா. நாச்சப்பன், க. ம. முத்துசாமி, அ. க. நாச்சிமுத்து. கொ. மா. முத்துசாமி, ஆ. கா. சுப்பிரமணியம், பெரியசாமி டெய்லர் வெ. மதுரமுத்து.

செயலாளர் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

தி. மு. கழகம்

இதுவரை தழைத்துள்ள கிளைகள்

478

கலப்பு மணம்

மதுரை, ஏப். 14—

தோழர் செந்திலாறுமுகம் புதல்வன் தோழர் என். எஸ். சுடலையாண்டி (சைவவேளாளர்) அவர்கட்கும, தோழர் ஆரோக்கியசாமி அவர்கள் புதல்வி தோழியர் அமலோர் பவமேரி (ஆதித்திராவிட கிருஸ்தவர்) அவர்கட்கும் 9-2-50-ல் பதிவுத் திருமணம் நடைபெற்றது இதன் நினைவாக மாலைமணி வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடையாக வரப்பெற்றோம். மகிழ்ச்சி!

ஓநாயைக்கொன்றால் ரூ. 400 பரிசு

ஆஸ்லோ, ஏப். 16—

நார்வேயின் வட பகுதியில் ஓநாய்களின் அட்டகாசம் தாங்க முடியவில்லை என்றும், கால் நடைகளையும், ரெய்ண்டீர் என்பவைகளையும் அவை கடித்துக் கொன்று விடுகின்றனவென்றும் இந்த ஓநாய்களை ஒழிக்க நார்வே சர்க்கார் தீவிர முயற்சி எடுத்து வருவதாகவும் தெரிகிறது.

ஒரு ஓநாயை சுட்டுக்கொன்றால் ரூ 400 பரிசளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதின் பேரில், நார்வே ஜியர்கள் விமானங்களிலிருந்து ஓநாய்களை வேட்டையாடுவதில் தீவிரமாக முனைந்திருக்கின்றனர்.

மலேயாவில் மூடநம்பிக்கை ஒழிக்கப்படுகிறது

இந்துமத பக்தர்கள் அலகு குத்திக் கொள்வது போன்ற செய்கைகளில் ஈடுபடக்கூடாது என்று, சிங்கப்பூரிலுள்ள சுப்பிரமணியர் ஆலய தர்மகர்த்தாக்கள் தடைவிதித்துள்ளனர். சிங்கப்பூரிலுள்ள நாட்டுக்கோட்டை செட்டிமார்களே இக்கோவிலின் நிர்வாகஸ்தர்களென்று சொல்லப்படுகிறது. மற்றொரு இந்து ஆலய நிர்வாகியான டாக்டர் பி. டி. நாதன் என்பவர், இத்தடை உத்தரவால் பக்த கோடிகளின் உரிமைகள் பறிக்கப்படுகிறது என்று அறிவித்திருக்கிறார்.

இந்து சட்டத் திருத்த மசோதா ஆதரிப்பு

தீர்மானம் நிறைவேற்றிய கழகங்கள்

(தொடர்ச்சி)

திருச்சினப்பள்ளி
திருவாரூர்
துறையூர் (திருச்சி வட்டம்)
பாளையங்கோட்டை
இடையப்பட்டி

மற்றைய கழகம்

மதுரை (தி. ம. ம. மன்றம்)

செஞ்சீனாவில் பஞ்சம்

4 கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்

ஹாங்காங், ஏப். 15—

செஞ்சீனாவில் 4 கோடி மக்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளனரென்று அக்நாட்டு அரசாங்கம் கூறுகிறது. இதில் 70 லட்சம் மக்கள் மிகவும் நெருக்கடியான நிலையில் உள்ளனரென்று அறிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு நீடிக்கிறது

புதுடில்லி, ஏப். 14—

ரயில்வே சொத்துக்களையும், ரயில்வே பாதைகளையும் பாதுகாப்பதற்காகப் போர்க்காலத்திலும், அதன் பின்னரும் ஏற்படுத்தப்பட்ட விசேஷ போலீஸ் பாதுகாப்பை, மேலும் ஆறுமாத காலத்துக்கு நீடிக்கச்செய்வதென்று இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

குமாவன் எக்ஸ்பிரஸ் விபத்தில் மாண்டவர் 37 பேர்

லட்சுமணபுரி, ஏப். 15—

குமாவன் எக்ஸ்பிரஸ் விபத்தில் மாண்டவர் தொகை 37 என்று இப்பொழுது அறிவிக்கப்படுகிறது.

மேலும் ஆறு பேர் பலி

விஜயவாடா, ஏப். 14—

சென்ற புதன் கிழமையன்று மலபார் தனிபோலீஸ் கம்யூனிஸ்டுகளைச் சுற்றி வளைத்து 6 பேரைச் சுட்டுக்கொன்றது.

இனி நடப்பவை

வேலூர்:—இவ்வூர் தி. மு. க. சார்பில் 19-4-50 அன்று ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் ஊ. கண்ணன் அவர்கள் தலைமை வகிப்பார் தோழர் என். வி நடராசன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

• • •

சென்னை:—தமிழாசிரியர் கழகத்தின் சார்பில் 17—4—50 திங்கள் மாலை 5 மணிக்குப் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியில் உறுப்பினர் பொதுக்கூட்டம் நடைபெறும். யாவரும் தவறுதல் வருமாறு பொதுச்செயலாளர் தோழர் எஸ். விசுவநாதன் வேண்டுகிறார்.

முத்தமிழ் வளர்ச்சி மாநாடு

கோவையில் மே 27, 28 நாட்களில் நடைபெறும்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமைதாங்குவார்

இயல், இசை கூத்து—புலவர்கள் பலரும் கலந்துகொள்வார்கள்

இரண்டு நாட்களிலும், சி. என். ஏ. குழுவினரின் நாடகங்கள் நடைபெறும்

கோவை மாவட்ட தி. மு. கழகம்

குறிப்பு:—மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்த வேண்டியிருத்தலாலும், முன்புகுறிப்பிட்டபடி இடையில்போதுமான நாட்கள் இல்லாததாலும், மே 13 14-ம் நாட்களில் வைக்கப்பட்டிருந்த மாநாடு, மே 27, 28 நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேரு—லியாகத் ஒப்பந்தம் பற்றி அமெரிக்க பத்திரிகைகள்

—(௳)—

'நியூயார்க் ட்ரிபியூன்' பாராட்டு

நியூயார்க், ஏப். 16—

நேரு—லியாகத் உடன்படிக்கையை அமெரிக்கப் பத்திரிகைகள் வரவேற்று தலையங்கம் எழுதியிருக்கின்றன.

இந்த உடன்படிக்கை மூலம் மதவெறி அடங்கி நல்லுறவு ஏற்பட்டால், நவீன சரித்திரத்திலேயே இது மிகவும் முக்கியமான தஸ்தாவேஜாக மதிக்கப்படும் என்று, நியூயார்க் ஹெரால்ட் ட்ரிபியூன் எழுதியிருக்கிறது.

இரு நாடுகளும் ஒன்றை ஒன்று எதிர்த்துக்கொண்டு தகராறு விளைவித்துக்கொண்டிருந்தால், இரு நாடுகளும் அமைதியுடன் வாழமுடியாதென்பதுடன்பொருளாதாரத் துறையில் சுபிட்சத்தை யடையமுடியாதென்றும், இந்தியாவும், பாகிஸ்தானும் ஆசியாவின் முன்னேற்றத்திற்கே அஸ்திவாரம்போல் அமைந்திருக்கிறதென்றும், இவ்விரு நாடுகள் ஒத்துப்போக முன்வந்தது பகட பூர்வமாக வரவேற்கத்தக்கது என்றும் அப்பத்திரிகை கூறுகிறது.

கிருஸ்டியன் ஸயன்ஸ்மானிடர்எழுதுகையில்எப்பொழுது மனக்கசப்பு, பகைமை உணர்ச்சி இவைகளை ஒழிக்க இருநாடுகளும் முற்பட்டுவிட்டதோ அப்பொழுது கால்வாய் தண்ணீர் தகராறு, காஷ்மீர் தகராறு, வர்த்தகத் தகராறு இவைகள் எளிதில் தீர்க்கப்பட்டுவிடும் என்று நம்பலாம் எனக்குறிப்பிட்டிருக்கிறது.

இப்பத்திரிகை மேலும் எழுதுகையில் இந்தநேசஉறவால பியூனிஸத்தை இந்தியாவும், பாகிஸ்தானும் ஒழித்துக்கட்டுவது சாத்தியமே என்றும், இந்த உடன்படிக்கையை இரு நாடுகளும் வெற்றிகரமாக அமுல்படுத்தவேண்டும் என்றும், தீவிரவ திட்டங்களை முதலில் இரு நாடுகளும் ஒழிக்கவேண்டும் என்றும் கூறியிருக்கிறது.

ஸோவியத் அதிகாரி தற்கொலை

பெர்லின், ஏப். 16—

பெர்லினிலுள்ள சோவியத் அதிகாரி மேஜர் ஜெனரல் கவாஷ்னின் ஸ்வீடனுக்குத் தப்பிச்செல்ல 4 மாதங்களுக்கு முன் முயன்றாரென்றும், தன் முயற்சி வெற்றி பெறுமுன் போலீசே தன் மனைவியையும் மகனையும் சுட்டுவிட்டு தானும் சுட்டுக்கொண்டு மாண்டார் என்ற விவரத்தை, பெர்லின் பத்திரிகை ஒன்று வெளியிட்டிருக்கிறது.

இவருக்கு மாஸ்கோவிடமிருந்து கல்ல குறிப்பு கிடைத்ததின் பேரிலேயே எங்கே தன்னை மாஸ்கோவுக்கு அழைக்கப்போகிறார்களோ என்று பயந்து, ஸ்வீடனுக்குத் திரும்பிச்செல்ல முயன்றாராம். ஆனால் ரஷ்ய அதிகாரிகள் அவரை கைது செய்து விட்டனர். அதன் பேரிலேயே அவர் குடும்பத்தினரையும் கொன்று, தன்னையும் தற்கொலை செய்துகொண்டாராம்.

ஐ. எல். ஓ. ஆசியா கமிட்டி

ஜினீவா, ஏப். 16—

சர்வதேச தொழிற் சங்கக் கமிட்டிக்கு ஆலோசனை கூறவும், பொது விஷயங்களில் ஆசியாவின் மனப்போக்கு என்னவென்பதை எடுத்துச் சொல்லவும் ஒரு கமிட்டியை ஆசியாவில் ஏற்படுத்த, இந்த ஸ்தாபனம் தீர்மானித்திருக்கிறது.

இக்கமிட்டியில் 6 சர்க்கார்களின் பிரதிநிதிகள் இருப்பர். இதில் மூவர் தொழிலாளர் பிரதிநிதியும் மூவர் முதலாளிகளின் பிரதிநிதியுமாக இருப்பர்.

இக்கமிட்டி விஷயமான இதர விவரங்கள் ஐ எல். ஓ. வின் அடுத்த ஜெனரல்பாடி கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்.

"சீனமொழியில் செயலாற்றுக"

ஹாங்காங், ஏப். 16

எல்லா அலுவல்களும், கணக்கு வழக்கு செலவுகளும் சீனமொழியிலேயேதான் நடைபெறவேண்டும் என்று கம்யூனிஸ்டு சர்க்கார் உத்திரவிட்டிருப்பதினால், இம்மாத முடிவிற்குள்ளேயே அமல்நாட்டு பெயர்களும், பாங்கிகளும் மூடப்பட்டுவிடும் என்று தெரியவருகிறது.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1.